**கொத்மலை பிரதேச சபை - 2013**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பிரதேச சபை மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,281,416 தொகையான கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 587,333 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 694,083 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,838,427 தொகையான கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,844,022 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 5,595 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 11,864,606 தொகையான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 11,964,606 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 100,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 77,211,643 தொகையான திரண்ட நிதியத்தினதும் ஒதுக்கத்தினதும் பெறுமதி ரூபா 79,498,900 ஆக

கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக திரண்ட நிதியம் மற்றும் ஒதுக்கங்கள் ரூபா 2,287,257 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மீளாய்வாண்டின் போதும் சரிசெய்யப்படாது இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் அதன் இணக்கம் தொடர்ந்தும் காணப்பட்டது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய உபயோகப் பதிவேடுகளின் படியான மீதிகளுக்கும் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படியான மீதிகளுக்கும் இடையே ரூபா 50,005 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,091,403 ஆக இருந்ததுடன் அதில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,626,261 ஆக இருந்தது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்தவேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 527,494 ஆக இருந்தது.

### 1.3.6 தொங்கல் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 2,400,849 ஆக இருந்ததுடன் அந்த மீதிக்கான காரணத்தைப் பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 08 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) கணக்காய்விற்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 68,482,051 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| (அ) | இலங்கைக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவு | பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்ட பின் மரணித்த மற்றும் விபரங்களைக் கண்டறிய முடியாத 21 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 28,952 கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19 ஆவது பிரிவு மற்றும் மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் | பிரதேச சபை அலுவலகங்களில் ஊழியர்களை நியமிக்கும் அதிகாரி சபையின் செயலாளராக இருந்த போதிலும் தலைவரினால் 07 ஊழியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு ரூபா 894,753 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,212,681 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,536,147 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 323,466 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக 2013 ஆம் ஆண்டின் போது 03 வருமான விடயங்களில் வருமானம் 2 சதவீதம் முதல் 13 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்தமை மற்றும் 04 செலவின விடயங்களில் செலவினம் 05 சதவீதம் முதல் 115 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரித்தமையும் காரணங்களாக இருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ------------------ | ------------- | ------------- | ------------- |
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| I. | வீதவரியும் வரியும் | 4,219 | 2,757 | 1,462 |
| II. | வாடகை | 1,397 | 619 | 778 |
| III. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,661 | 2,661 | - |
| IV. | ஏனைய வருமானம் | 1,389 | 1,080 | 309 |

**2.3.2 வாடகை வாகனம் நிறுத்திவைத்தல் கட்டணம்**

வருமானம் அறவிடுவது தொடர்பாக பிரதேச சபை குறைவாகக் கவனம் செலுத்தியமையின் காரணமாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வாடகை வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம் ரூபா 532,100 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின்படி இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்களின் அனுமதிப்பத்திரக் கட்டணம் முன்னைய ஆண்டின் பெறுவனவுகளிலிருந்து 1 சதவீதமாக அறவிட வேண்டிய போதிலும் சபை அதிகாரசப் பிரதேசத்தில் இரண்டு ஹோட்டல்களின் பெறுவனவுகளில் 1 சதவீதம் அறவிடுவதற்குப் பதிலாக ரூபா 3,000 அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.4 இறைச்சிக் கடை வாடகை**

1986 ஆம் ஆண்டு முதல் நிலுவை இறைச்சிக்கடை வாடகையாக எம்.எம். அலி அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 78,500 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்ட 6 தொகைபேசி பரிவர்த்தனைக் கோபுரங்கள் தொடர்பாக சபை எந்த நடவடிக்கையும் எடுக்காதிருந்ததுடன் அதன் மூலம் அறவிடவேண்டிய கணிசமான வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.

**2.3.6 மின்சார செயல்திட்டம்**

பிரதேச சபை எல்லலையில் அமுல்படுத்தப்பட்ட சிறிய அளவிலான 03 மின்சார செயல்திட்டங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாகாண சபையிலிருந்து நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 587,333 தொைகயும் ரூபா 5,844,022 தொகையான முத்திரைக் கட்டணமும் அறவிடவேண்டியிருந்தன.

**3. செயற்பாட்ட மீளாய்வு**

**3.1 செயலாற்றல் மதிப்பீடு**

வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கிணங்க செயல்நடவடிக்கைகள் நடைபெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறிக்கையின் மூலம் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல்களை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறிக்கை மூலம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கை நிதிசார் செயலாற்றலுடன் பரீட்சிக்கக்கூடிய வகையில் போதியளவில் இலக்கிடப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டின் போது 85 அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டில் காணி ஏல விற்பனை நிறுவனத்தின் மூலம் இரண்டு காணிக் கூறுகள் சபை அங்கீகாரமின்றி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் பிரதேச சபை அது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை.

**3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(i) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் பூண்டுலோயா நகரத்தில் ரூபா 32,675,105 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் வேலைகள் 2011 நவம்பர் 02 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு கையேற்கப்பட்டு 02 வருட காலங்கள் கடந்திருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது மூடிவைக்கப்பட்டிருந்தது.

(ii) இலக்கம் J.D.4866 என்ற நிசான் கரவான் வகையின் தீயணைப்பு வாகனம் 2010 ஆம் ஆண்டு முதல் 04 வருட காலங்களுக்கு மேலாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு அலுவலக வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

**3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

பிரதேச சபை கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான முறையான திட்டமொன்றை பின்பற்றாதிருந்ததுடன் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் குப்பைகள் அகற்றப்பட்டிருந்தது.

**3.5 மிகைக் கட்டணம்**

--------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி பொறுப்புவாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 127,525 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

-----------------------------------------------------------------

**4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

-------------------------------------------------------

மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

-----------------------------------

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் படி மதிப்பிடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 06 வருமான விடயங்களில் 16 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் 05 சதவீதம் முதல் 748 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

-----------------------------------

நிறுவனத்தில் பேதாதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்